1993 ஏப்ரல் 1]

213—

ஆலங்குடியில் புதியதாகத் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்துதல்.

*16475—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் புதியதாகத் தொழிற் பயிற்சி நிறுவனம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே•

(அ) மற்றும் (ஆ) : ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி துவங்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. ஆகவே இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. எஸ். சண்முகநாதன் : ஆலங்குடி நகர் சட்டமன்றத் தொகுதியின் தலைநகராகவும், தாலுகாவினுடைய தலைநகராகவும் இருக்கிறது. அங்கே படித்த இளைஞர்கள் வேலை எதுவும் இல்லாமல் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அங்கே அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று-பக்கத்தில் இருக்கின்ற ஒரே ஒரு கல்லூரிதான் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கின்றது ; ஆகவே, படித்தவர்கள் அந்தக் கல்லூரியில் சேருகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் ; எனவே அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய கோரிக்கையை ஏற்று, எதிர் வரும் காலகட்டத்திலாவது தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை நகரத்தில் 344 இருக்கையோடு கூடிய அரசினர் தொழிற் பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது. அது தவிர, 5 தனியார் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இன்றைக்கு ஆலங்குடியிலே புதிதாக அரசு தொழிற் பயிற்சி பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், தொடர் இனச் செலவாக ஐந்து இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கும் தொடரா இனச் செலவாக அறுபது இலட்சம் ரூபாயும் செலவாகும். எனவே அரசினுடைய நிதி நெருக்கடியைக் கருத்திலே கொண்டு இப்போது ஆலங்குடியில் அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கிற திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற வர்த்தகப் பெருங்குடி மக்கள் அங்கே இருக்கின்ற தனியார் நிறுவனங்கள் அந்த தொழில்நுட்பக் கல்வியை துவங்குகின்றபோது, அரசு அதற்கு ஆதரவு அளித்து அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய தொழிற் பயிற்சிப் பள்ளி துவங்க முன்வந்தால், புரட்சித் தலைவியினுடைய அரசு அனுமதி வழங்கும்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 214, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

214—

புங்கங்குழி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தல்.

*10346—டாக்டர் சு. மணிமேகலை :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியம் கட்டுநாடுப் பகுதியிலுள்ள 'புங்கங்குழி' ஊராட்சியில் ஓர் கால்நடை மருத்துவமனையை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் ஒன்றியம் கட்டுநாடுப் பகுதியிலுள்ள புங்கங்குழி ஊராட்சியில் கால் நடை மருந்தகம் அமைக்க செயற்குறிப்பு தற்போது நிலுவையில் இல்லை. வரும் ஆண்டுகளில் இதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில், கால்நடை மருந்தகம் மேற்கண்ட கிராமத்தில் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுநாடுப் பகுதி என்று அழைக்கப்படும் அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. ஏழை மக்களை அதிகமாகக் கொண்ட பகுதி. கால்நடையை நம்பி வாழும் பகுதி. அது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் சிலை திறப்பு விழாவிற்கு வந்து கலந்து கொண்டு அங்கேயுள்ள மக்களின் நலனைக் கண்டறிந்து வந்தார்கள். ஆகவே, அவர் களின் நலனைக் கருதி யூனியன் அளவில் ரெசலூஷன் போட்டு